Registered as a Newspaper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 14 (30-08-1993) திங்கட்கிழமை ஓசை 193

நல்லூர் இளைஞர் நூலகம்
யாழ்ப்பாணம்

## மோட்டார் ஊர்திப் பதிவு
## ஐந்தாம் கட்டம் ஆரம்பம்

மோட்டார் ஊர்திப்பதிவின் ஐந்தாம் கட்டம் இன்று தொடக்கம் ஆரம்பித்திருப்பதாக மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தருகின்றனர். தீவுப் பகுதிகளைச் சேர்ந்த மோட்டார் ஊர்தி உரிமையாளர்களையும், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மோட்டார் ஊர்தி உரிமையாளர்களையும் கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதிச்செயலகத்திற்கு தமது மோட்டார் ஊர்திகளை எடுத்துச் சென்று இன்று தொடக்கம் 18-09-1993 வரையிலான காலப்பகுதிக்குள் வார நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 1.00 மணி வரையிலும் பரிசோதனைக்குட்படுத்துமாறு மோட்டார் ஊர்திப்பதிவுப் பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுக் கொள்கின்றனர்.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## ( கடற் கரும்புலிகள் மற்றுமொரு வீரசாதனை )

# 'சுப்பர்டோறா' அதிவேகபீரங்கிபடகுதகர்ப்பு;

# 4 அதிகாரிகள் உட்பட 12 கடற்படையினர் பலி



## பருத்தித்துறைக் கடலில் சம்பவம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில், சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான - இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட - "சுப்பர் டோறா" அதிவேக பீரங்கி ரோந்துப் படகொன்றை நேற்றுக்காலை 9.20 மணியளவில் கடற் கரும்புலிகள் இருவர் தாக்கி அழித்தனர். வெடிமருந்து ஏற்றிய படகொன்றில் சென்ற கடற் கரும்புலிகளே இவ் வீரகாவியத்தைப் படைத்து வீரச்சாவடைந்தவர்களாகும்.

இத் தாக்குதலின்போது இச் "சுப்பர் டோறா" படகு முற்றாக மூழ்கடிக்கப்பட்டதோடு, நான்கு அதிகாரிகள் உட்பட பன்னிரெண்டு கடற்படையினர் கொல்லப்பட்டனர். மேலும், இவ் அதிவேக ரோந்துப் படகில் இருந்த இரு பீரங்கிகளும், 50 கலியர் துப்பாக்கிகளும் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை கடந்த நான்கு நாட்களில் கடற் கரும்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் என்பதோடு, அவர்கள் மூழ்கடித்த மூன்றாவது கடற்படை படகும் ஆகும்.

இத்தாக்குதல் குறித்து மேலும் தெரியவருவதாவது. திருக்கோணமலையிலிருந்து முன்னதாக வடக்குவந்த இப்படகு கட்டைக்காட்டில் இருந்து காங்கேசன்துறைக்கு ரோந்துசென்ற போது பருத்தித்துறைக் கடலில்வைத்து கடற் கரும்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கடற்புலிகளின் 4 படகுகள்

## "சுப்பர் டோறா" படகு

1985-1987ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் இப்படகானது:


- எதிரியின் கப்பலைத் துரத்திப் பிடித்தல்
- யுத்த நேரங்களில் கடற் பிரதேசத்தைப் பாதுகாத்தல்
- இரவு நேரங்களில் ரோந்தில் ஈடுபடுதல்
- உளவு வேலைகளில் ஈடுபடுதல்
- பெரிய கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கல்

ஆகிய தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது இதுபோன்ற 10 வரையான படகுகள் சிறிலங்கா கடற்படையினரிடம் உள்ளன. இப்படகானது இஸ்ரேலில் உள்ள, "றப்ராஸ்" நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றைத் தவிர சாதாரண டோறா, கொரியன் டோறா, என வேறுவகைப் படகுகளும் சிறிலங்கா கடற்படையினரால் பாவிக்கப்படுகின்றன. இவை யாவற்றிலும் பார்க்கிலும் "சுப்பர் டோறா" செயற்திறன் கூடியது. அத்துடன் இதன் நீள அகலங்களும் அவற்றைவிட கூடியது. இப்படகானது முற்றிலும் அலுமினியத்தால் செய்யப்பட்டது. இது சாம்பல் நிறத்தையுடையது இப்படகில் மொத்தமாக 9—12 கடற்படையினர் பணிபுரிவர். இவர்கட்குக் கட்டளையிடும் அதிகாரியாக "லெப்ரினண்ட்", "லெப். கொமாண்டர் பதவியையுடைய கடற்படையினர் பணிபுரிவர். இப்படகு பற்றிய சிலதரவுகள் வருமாறு:

- படகின் அண்ணளவான நீளம்:- 41 அடி.
- படகின் அண்ணளவான அகலம்:- 15 அடி.
- படகின் ஆகக்கூடிய வேகம்:- மணிக்கு 66.67 கிலோமீற்றர்
- படகின் சாதாரண வேகம்:- மணிக்கு 61.29 கிலோ மீற்றர்
- படகு ஒரு செக்கனில் நகரும் தூரம் :- 17.025 மீற்றர்.
- படகின் வேகம் (கடல் மைல்களில்):- 35-40 கடல்மைல்.

படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதத் தளபாடங்கள்:-

- ஒற்றைக் குழல், "ஒவர்லிக்கன்" 20 மி. மீ பீரங்கி -02



தேசியத் தலைவர் பிரபாகரனுடன் கடற்கரும்புலிகள் மேஜர் புகழரசன் (வலது புறம்) கப்டன் மணியரசன் (இடது புறம்)

# கடற் கரும்புலிகள் இருவர் வீரச்சாவு

(பருத்தித்துறை)

நேற்றுக்காலை பருத்தித்துறை கடலில் சிறிலங்கா கடற்படையின் டோறா ரக ரோந்துப் படகை கரும்புலித் தாக்குதல் மூலம் தகர்த்து இரு கடற் கரும்புலிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டுள்ளனர்.

❀ கடற்கரும்புலி மேஜர் புகழரசன் / புவீந்திரன் (சுப்பிரமணியம் நாககீதன் 90/7. ஏபி வீதி, அரியாலை யாழ்ப்பாணம்)

❀ கடற்கரும்புலி கப்டன் மணியரசன் [வேதநாயகம் றாஜரூபன் (கனியூட்) மணற்காடு, குடத்தனை] ஆகியோரே வீரச்சாவை தழுவிக் கொண்டவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மாவீரர் உருவப்படங்கள் இன்று மக்கள் அஞ்சலிக்கு

நேற்று காலை 9.20 மணிக்கு பருத்தித்துறைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான அதிவேக ரோந்துப்படகான டோறா கடற்படை படகினை வெடிமருந்து நிரம்பிய படகினால் முட்டி வெடிக்க வைத்து படகினை முற்றாக அழித்து மூழ்கடித்த கடற்கரும்புலிகள் மேஜர் புவீந்திரன் (புகழரசன்) அரியாலை, கப்டன் மணியரசன் (மணற்காடு) ஆகியோரின் உருவப்படங்கள் இன்று 9.00 மணிக்கு அணிவகுப்பு மரியாதைகளுடன் அவர்களது இல்லங்களில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

நாளை காலை 8.00 மணிக்கு உருவப்படங்கள் அவர்களது இல்லங்களில் இருந்து எடுக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டங்களிலும் தனித்தனி ஊர்திகள் மூலம் ஊர்வலமாக மக்கள் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படும் கோட்டங்கள் ரீதியாக இறுதி அஞ்சலிக் கூட்டங்கள் இடம்பெற்ற பின்னர், மேஜர் புவீந்திரனுடைய உருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கும் கப்டன் மணியரசனுடைய உருவப்படம் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திற்கும் எடுத்துச் செல்லப்பட்டு நடுகைக்கல் நாட்டப்படும்.

றிய படகொன்றில் சென்ற கடற் கரும்புலிகளே இவ் வீரகாவியத்தைப் படைத்து வீரச்சாவடைந்தவர்களாகும்.

இத் தாக்குதலின்போது இச் "சுப்பர் டோறா" படகு முற்றாக மூழ்கடிக்கப்பட்டதோடு, நான்கு அதிகாரிகள் உட்பட பன்னிரெண்டு கடற்படையினர் கொல்லப்பட்டனர். மேலும், இவ் அதிவேக ரோந்துப் படகில் இருந்த இரு பீரங்கிகளும், 50கலிபர் துப்பாக்கிகளும் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை கடந்த நான்கு நாட்களில் கடற் கரும்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் என்பதோடு, அவர்கள் மூழ்கடித்த மூன்றாவது கடற்படை படகும் ஆகும்.

இத்தாக்குதல் குறித்து மேலும் தெரியவருவதாவது. திருக்கோணமலையிலிருந்து முன்னதாக வடக்குவந்த இப்படகு காட்டைக்காட்டில் இருந்து காங்கேசன்துறைக்கு ரோந்துசென்ற போது பருத்தித்துறைக் கடலில்வைத்து கடற் கரும்புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

[4ஆம் பக்கம் பார்க்க]

ஆகிய தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டது. தற்போது இதுபோன்ற 10 வரையான படகுகள் சிறிலங்கா கடற்படையினரிடம் உள்ளன. இப்படகானது இஸ்ரேலில் உள்ள, "றம்ராஸ்" நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றைத் தவிர சாதாரண டோறா, கொரியன் டோறா, என வேறுவகைப் படகுகளும் சிறிலங்கா கடற்படையினரால் பாவிக்கப்படுகின்றன. இவை யாவற்றிலும் பார்க்கிலும் "சுப்பர் டோறா" செயற்திறன் கூடியது. அத்துடன் இதன் நீள அகலங்களும் அவற்றைவிட கூடியது. இப்படகானது முற்றிலும் அலுமினியத்தால் செய்யப்பட்டது. இது சாம்பல் நிறத்தையுடையது இப்படகில் மொத்தமாக 9—12 கடற்படையினர் பணிபுரிவர். இவர்கட்குகட்டளையிடும் அதிகாரியாக "லெப்ரினன்ட்", "லெப். கொமாண்டர் பதவியையுடைய கடற்படையினர் பணிபுரிவர். இப்படகு பற்றிய சிலதரவுகள் வருமாறு:

- படகின் அண்ணளவான நீளம்:- 41 அடி.
- படகின் அண்ணளவான அகலம்:- 15 அடி.
- படகின் ஆகக்கூடிய வேகம்:- மணிக்கு66.67 கிலோமீற்றர்
- படகின் சாதாரண வேகம்:- மணிக்கு 61.29 கிலோ மீற்றர்
- படகு ஒரு செக்கனில் நகரும் தூரம் :- 17.025 மீற்றர்.
- படகின் வேகம் (கடல் மைல்களில்):- 35-40 கடல்மைல்.

படகில் பொருத்தப்பட்டுள்ள ஆயுதத் தளபாடங்கள்:-

- ஒற்றைக் குழல், "ஒவர்லிக்கன்" 20 மி. மீ பீரங்கி -02
- 50 கலிபர் விமானவெதிர்ப்பு பீரங்கி - 02
- இயந்திரத் துப்பாக்கிகள்.

[4ஆம் பக்கம் பார்க்க]

# கடற்புலிகளின் 4 படகுகள் டோறாவை சுற்றிவளைத்தன

நேற்றுக் காலை பருத்தித்துறைக் கடலில் கடற்கரும்புலிகள் தாக்கி மூழ்கடித்தடோறா படகுமீதான தாக்குதலின் போது முதலில் 'டோறா'வை கடற்புலிகளின் வேகப்படகுகள் நான்கு வழி மறித்து தாக்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதைத் தொடர்ந்து, கடற்புலிகளுக்கும், சிறிலங்கா கடற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# இரு 20 எம்.எம். பீரங்கிகள் இரு 50 கலிபர்கள் மீட்பு

கடற் கரும்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட டோறாப் படகு மூழ்கிக் கொண்டிருந்த வேளையில் அப்படகில் இருந்து அதிநவீன ஆயுதங்களும், வெடிப்பொருள்களும் மீட்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு: ★ 20 எம். எம். பீரங்கி (அஸ்றா / ஓஎலிகன் 41ஏ ரக பன்முக தேவைக்கான சிறு பீரங்கி) -02 ★ 50 கலிபர் துப்பாக்கி -02

மேற்குறிப்பிட்ட பீரங்கிகளுக்குரிய ஷெல்கள், மற்றும் ரவைகளும் பெருமளவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

## 20மி.மீ. இலகுபீரங்கி

நேற்று பருத்தித்துறைக் கடலில் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட 20 மி. மீ. இலகு பீரங்கி (அஸ்ரா ஓ எலிகன் 41 ஏ இலகு கலிபர் பீரங்கி) குறித்த சில தகவல்கள்:

| | | |
|---|---|---|
| கலிபர் | : | 20 மி. மீ. |
| குழலின் நீளம் | : | 70 கலிபர்கள் |
| குண்டின் ஆரம்பம்வேகம் | : | செக்கனுக்கு 825-835 மீற்றர்கள் |
| தூர வீச்சு | | |
| கிடையாக | - | 4. 39 கிலோமீற்றர் |
| உயர்த்தி | - | 3 கிலோமீற்றர் |
| சுடும் வீதம் | - | நிமிடத்துக்கு 800குண்டுகள் |
| வெடிப் பொருளின்நிறை | - | 244 - 264கிராம் (சுமார் 1/4கிலோ) |

[4ஆம் பக்கம் பார்க்க]

## கடற்படையை தேடிய விமானப் படையினர்

(வடமராட்சி)


முனைக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் படகுசேதமாக்கப்பட்டதையடுத்து உலங்குவானூர்தி, குண்டு வீச்சு விமானங்கள் அப்பகுதிக்கு விரைந்து வந்தன. படையினரை தேடி அப்பகுதியில் விமானங்கள்வட்டமிட்டவாறு ரோந்து புரிந்தது.

விமானங்கள் ரோந்துசேவையின்போது அப்பகுதியில் தாக்குதல்களை மேற்கொள்ளஆரம்பித்தவேளை கடற்புலிகள் விமான எதிர்ப்பு தாக்குதலை தொடுத்தனர். அதனையடுத்து விமானங்கள் உயரப் பறந்து சென்றன.

சிலமணி நேரங்களுக்குப்பின்னர் சியாமாசெட்டி விமானம் ஒன்று உயரப்பறந்தவாறுவடமராட்சிப்பகுதியை வட்டமிட்டவாறு இருந்தது. பிற்பகல் 1.30 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து குடியிருப்புகள் மீது தாக்குதல்கள் ஆரம்பமானது. (யோ)

**உள்ளே...**

பருத்தித்துறைக் கடலில் நேற்று வீரகாவியம் படைத்த இரு கடற் கரும்புலிகளின் உருவப் படங்கள் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.



தலைவர் பிரபாகரன், நேற்று கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட இரு 20 எம்.எம். பீரங்கிகள், இரு 50 கலிபர் துப்பாக்கி ஆகியவற்றை பார்வையிடுகிறார்.

## வரி விளம்பரம்

### பதவிவெற்றிடம்

யாழ்நகரின் மத்தியில் இயங்கி வரும் முன்னணி உணவகத்திற்கு மேலைத்தேய கீழைத்தேய, சைனீஸ் உணவுவகைகள் சிற்றுண்டிகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்களும், மற்றும் உணவு பரிமாறுவதில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. நற்சான்றுப் பத்திரங்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும் தொடர்பு சுவையருவி. யாழ்ப்பாணம். (சி/7292)

### றெனி மூக்குக்கண்ணாடியகம்

உங்கள் கண்களை பரிசோதித்துச் சரியாக கண்ணாடி வழங்கப்படும் இல. 288, நாவலர் வீதி (யாழ். தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (5786)

### உடன் விற்பனைக்குண்டு

2 மாதம் வளர்ந்த பிறவுண் சேவல் உடன் விற்பனைக்குண்டு 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (5793)


### தேர் உற்சவம் சிறப்பாக நிறைவேற்றம்

(குருநகர்)

தெல்லியூர் துர்க்கை அம்பன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முற்பகல் 10 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

வசந்த மண்டபபூசை நடைபெற்று 10 மணிக்கு அம்பாள் தேருக்கு எழுந்தருளினாள் 10.30 மணிக்கு ரதவீதிவலம் ஆரம்பமானது 11 மணிக்கு இருப்பிடத்தை அடைந்த ரதத்தில் இருந்து அம்பாள்பச்சை சாத்தப்பட்டு 11.30 மணிக்கு ஆலயத்திற்கு எழுந்தருளினாள்.

வழமையில் இருந்து அடியார்களின் கூட்டம் குறைந்து காணப்பட்ட போதும் அமைதியாகவும் ஒழுங்காகவும் திருவிழா நடந்தேறியது [21]

## ஐ. ஐ. தே. முவை இணைக்க ஐ. தே. க. நிபந்தனை விதிப்பு

[கொழும்பு]

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியையும், ஐக்கிய தேசிய கட்சியையும் இணைப்பது தொடர்பாக ஐ. தே. க. மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளது. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கலைக்கப்பட்டு, எல்லா உறுப்பினர்களும் ஐ. தே. கவுடன் இணைய வேண்டும் அல்லது தேர்தல் வரும் வரை காத்திருந்து இரு கட்சிகளும் தேர்தலில் இணைந்து போட்டியிடுவது அல்லது காமினி திசாநாயக்காவை மட்டும் இணைத்து அவருக்கு அமைச்சர் பதவி வழங்குவது என்பதே ஐ. தே. கவின் நிலைப்பாடாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விவசாயிகள் ஏமாற்றம்

(பருத்தித்துறை)

கொழும்பிலிருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள வாளிகளைப் பெறுவதற்கென புலோலி கமநலச் சேவை நிலையத்திற்குச் சென்ற விவசாயிகள் ஏமாற்றத்துடனும், கவலையுடனும் வீடு திரும்பினர்.

கமநலச்சேவை நிலையங்களில் முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு வாளிகள் வழங்கப்படவுள்ளதாக புலோலி கமநலச்சேவை நிலையம் அறிவித்ததையடுத்து அப்பகுதி விவசாயிகள் கடந்த திங்கட்கிழமை கமநலச்சேவை நிலையத்திற்குச் சமூகமளித்திருந்தனர் இவ்விவசாயிகளுக்கு 650 வாளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன திங்கட்கிழமை காலை வாளிகள் பெற வந்திருந்த விவசாயிகளுக்கு நம்பர் துண்டுகள் விநியோகிக்கப்பட்டன. பின்னர் நம்பர்த் துண்டுகள் திரும்பப் பெறப்பட்டு வாளிகள் சில நாட்களுக்கு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டது. இதனால் வாளி வாங்கவந்த விவசாயிகள் ஏமாற்றத்துடனும், விரக்தியுடனும் வீடு திரும்பினர். (25)

### சந்திப்பு செய்தியில் உண்மையில்லை

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவும் அவரது சகோதரி திருமதி சந்திரிகா குமாரணதுங்கவும் வெளிநாடொன்றில் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வெளிவந்த பத்திரிகைச் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்க கொழும்பிலுள்ள தமது நண்பர் ஒருவருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார்.

### ஐம்பது வீத சம்பளம்

லங்கா சீமெந்து நிறுவனத்தின் ஊழியர்களுக்கு ஐம்பது சதவீத சம்பளம் வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன கூரே மேற்படி நிறுவனத்தின் தலைமை நிர்வாகத்தை பணித்துள்ளார்.


## தேரேறி வரும் முருகன் பொழியும் கருணை மழை

ஊரெங்கும் பாயட்டும் என்றே இறைஞ்சுகின்றோம்

நவாலி அந்திராண் முருகமூர்த்தி கோவில் தேர்த்திருவிழா சிறப்புற விழைவோர்

வேல் முருகன் விற்பனை நிலையம்

537, பருத்தித்துறை வீதி,

நல்லூர். (சி/7306)


## உபசபாநாயகர் காமினிமீது ஒழுங்கு நடவடிக்கைக்கு ஏற்பாடு?

[கொழும்பு]

பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அடுத்த மாதம் 7ஆம் திகதி ஐ தே கட்சியின் ஒழுங்குக்குழுகூட்டத்தில் காமினிக்கு எதிரான குற்றச்சாட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலஞ்சம், ஒழுக்கீனம் குறித்து விசாரிக்க நிரந்தரமான ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் நிமல் சிறிபாலடி. சில்வா பாராளுமன்றத்தில் கொண்டு வந்த மசோதா மீதான வாக்கெடுப்பின்மீது காமினி பொன்சேகா கலந்து கொள்ளவில்லை என்பது தெரிந்ததே. இது தொடர்பாகவே அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஏனைய ஐ. தே. கட்சி உறுப்பினர் மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### றோகணவின் தாய் மரணம்

(கொழும்பு)

ஜே. வி. பியின் முன்னாள் தலைவரான றோகண விஜேவீராவின் தாயார் மெசிநோனா (86 வயது) அண்மையில் மாத்தறையிலுள்ள தமது இல்லத்தில் காலமானார்.

அவரது மரணச்சடங்கில் கலந்து கொள்வதற்காக திருகோணமலை கடற்படைத் தளத்தில் பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ள விஜேவீராவின் பாரியாரும் பிள்ளைகளும் அழைத்து வரப்படுவர் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

## இரங்கலுரை எதுவும் லலித்திற்கு இதுவரை இல்லை

[கொழும்பு]

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவர் இறந்தால் அடுத்துவரும் பாராளுமன்ற அமர்வுகளில் போது அவரைப் பற்றிய நினைவு கூர்தலும், இரங்கலுரையும் நிகழ்த்தப்படுவது வழக்கம். ஆனால் பாராளுமன்ற உறுப்பினராகவும், வர்த்தக கப்பல் துறை அமைச்சு தேசிய பாதுகாப்பு அமைச்சு போன்ற முக்கிய அமைச்சுக்களின் அமைச்சராகவும் பதவி வகித்த லலித் அத்துலத் முதலியின் மறைவு குறித்து சிறிலங்காப் பாராளுமன்றம் இதுவரை இரங்கல் தீர்மானம் எதையும் நிறைவேற்றவில்லை. இரு. லலித் அத்துலத் முதலி மரணமடைந்து நான்கு மாதங்கள் கடந்து விட்ட பின்பும் கூட இத்தகைய இரங்கல் தீர்மானம் விவாதத்திற்கு எடுக்கப்படாமல் இருப்பதுகுறித்து விசனம் தெரிவிக்கப்படுவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### சம்பளம் இடை நிறுத்தம்

1989இல் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு கடமையாற்றும் ஆசிரியர்களில் தகுந்த தராதரம் இல்லையென பரீட்சை ஆணையாளரால் அவர்களது கல்வித் தகைமை சான்றிதழ் மூலம் உறுதி செய்யப்பட்ட சில ஆசிரியர்களின் இம்மாதச்சம்பளம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் பிரதேச கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வேலணைக் கல்விக்கோட்டத்தில் ஒரு ஆசிரியரும் சாவகச்சேரிக் கல்விக்கோட்டத்தில் நான்கு ஆசிரியர்களும் இவ்வாறு சம்பளம் இடைநிறுத்தப்பட்டுள்ளார்கள் (17)

## டிசம்பர் மாதத்திற்கு முன் கட்சியின் வருடாந்த மாநாடு

### - சிறிமாவோ அறிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு டிசம்பர் மாதத்திற்கு முன்பாக கூட்டப்படும் என்று கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

கட்சியின் அலுவலக நிர்வாகிகளையும் தெரிவு செய்யும் இம் மாநாட்டில் கட்சியின் மறுசீரமைப்பிற்கான திட்டங்களும் கொள்கை வேலைத்...

...படுவதற்கு முன்பாக கட்சியின் மறுசீரமைப்புவேலைத்திட்டம் கட்சியின் மத்திய குழுவிலும், தேசியக் கமிட்டியிலும் தாக்கல் செய்யப்பட்டு பரிசீலிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### தேர்த்திருவிழா

[கொழும்புத்துறை]

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு...

## கொள்கைகளை விடவும் பதவி முக்கியமானதல்ல

### ஐ ஐ.தே.மு. பொதுச் செயலாளர்

(கொழும்பு)

ஐ.தே.க. வுடன் இணைவது தொடர்பாக ஜ. ஐ. தே. முவில் ஒருமைப்பாடான கருத்து எதுவும் இல்லை எனக் கூறப்படுகிறது. வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் முதல்வர் நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகள் வெளியிடப்பட்டதும் சுதந்திரகட்சி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து செயற்பட வேண்டுமென தீர்மானிப்பதற்கான முயற்சிகள் கட்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாம்.

மேலும் மேல் மாகாணத்தில் முதல்வர் சந்திரிகா குமாரணதுங்க தலைமையிலான ஆட்சிக்கு பூரண ஒத்துழைப்பை ஜ. ஐ. தே. மு. வழங்கி வருவதாகவும், வடமேற்கு மற்றும் தெற்கு மாகாணசபைகளின் முதல்வர் நியமனம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் இந்த இரு கட்சிகளுக்கு சாதகமாக அமையலாம் எனவும் முன்னணியின் பொதுச்செயலாளர் ஜி எம். பிரேமச்சந்திரா மேலும் தெரிவித்தார்.

ஐ. தே. க. வுடனான இணைவு பற்றிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர் கொள்கைகளின் முன் பதவி முக்கியமல்ல எனவும் நல்ல கொள்கைகளைப் பின்பற்றும் போது வேறு கட்சிகளுடன் இணைய முடியாது எனவும் தெரிவித்தார்.

### தியாகி சிவகுமாரன் பிறந்ததினம்

[கொழும்புத்துறை]

உரும்பிராய் தியாகி பொன். சிவகுமாரனின் 43 ஆவது பிறந்ததினம் கடந்த வியாழக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரது நினைவாலயத்தில் மிக அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது.

சிவகுமாரனின் இனத்தவர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றி மலர்மாலை சாத்தி அஞ்சலி வழிபாடுகள் செய்துள்ளதாக நினைவாலயசபைச் செயலாளர் திரு ச.ஏகாம்பரநாதன் தெரிவித்துள்ளார். [24]


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
31-08-1975

வீரச்சாவு
11-09-1992

### லெப்டினன்ட் பூபால்

[வேலாயுதம் கிருஷ்ணகுமார் [ரமேஸ்]

வியாபாரிமூலை, அல்வாய் வடக்கு, அல்வாய்

திதி: 30-08-1993

புலரும் பொழுதுகள் இம் மண்ணில் முகாரி இசைத்திட புதுயுகம் காணத் துடித்திட்ட வேங்கையணி நின்று வித்தாகி வீழ்ந்திட்ட வித்தகனே "பூபாலா" விடிகின்ற தேசத்தில் விருட்சமாய் எழுந்து நிற்பாய் என்பதனால் ஆறுகின்றோம் மன அமைதி வேண்டுகின்றோம் ஆத்ம சாந்தி.

30-08-1993 இன்று திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு வேண்டுகின்றோம்.


## விறகு தறிப்பதனை ஒழுங்குபடுத்த

மணியளவில் சிறப்பாக நடை பெற்றது.

வசந்த மண்டப பூசை நடை பெற்று 10 மணிக்கு அம்பாள் தேருக்கு எழுந்தருளினாள் 10. 30 மணிக்கு ரதவீதிவலம் ஆரம்பமானது 11 மணிக்கு இருப்பிடத்தை அடைந்த ரதத்தில் இருந்து அம்பாள்பச்சை சாத்தப்பட்டு 11 30 மணிக்கு ஆலயத்திற்கு எழுந்தருவினாள்.

முழமையில் இருந்து அடியார்கள் கூட்டம் குறைந்து காணப்பட்ட போதும் அமைதியாகவும் ஒழுங்காகவும் திருவிழா நடந்தறியது [21]


கருணைமழை

ஊரெங்கும் பாயட்டும் என்றே
இறைஞ்சுகின்றோம்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில்
தேர்த்திருவிழா சிற புற விழைவோர்

வேல் முருகன் விற்பனை நிலையம்
537, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (சி,7306)


டத்தில் ஒரு ஆசிரியரும் சாவகச்சேரிக் கல்விக்கோட்டத்தில் நான்கு ஆசிரியர்களும் இவ்வாறு சம்பளம் இடைநிறுத்தப் பட்டுள்ளார்கள் (17)

மானம் விவாதத்திற்கு எடுக்கப்படாமல் இருப்பதுகுறித்து விசனம் தெரிவிக்கப்படுவதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## டிசம்பர் மாதத்திற்கு முன் கட்சியின்வருடாந்த மாநாடு
### - சிறிமாவோ அறிவிப்பு

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு டிசம்பர் மாதத்திற்கு முன்பாக கூட்டப்படும் என்று கட்சித் தலைவி சிறிமாவோ பண்டார நாயக்க கூறியுள்ளார்.


கட்சியின் அலுவலக நிர்வாகிகளையும் தெரிவு செய்யும் இம் மாநாட்டில் கட்சியின் மறுசீரமைப்பிற்கான திட்டங்களும் கொள்கை வேலைத்திட்டங்களும் முன்வைக்கப்படுமெனவும அவர் மேலும் தெரிவித்தார்

இம் மாநாட்டில் சமர்ப்பிக்கபடுவதற்கு முன்பாக கட்சியின் மறுசீரமைப்புவேலைத்திட்டம் கட்சியின் மத்திய குழுவிலும், தேசியக் கமிட்டியிலும்தாக்கல் செய்யப்பட்டு பரிசீலிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### தேர்த்திருவிழா

[கொழும்புத்துறை]

அரியாலை நீர்நொச்சித் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தேர்த் திருவிழா இன்று திங்கட் கிழமை நடைபெறும்.



வீரச்சாவு
11-09-1992

## லெப்டினன்ட் ரூபால்
[வேலாயுதம் கிருஷ்ணகுமார் [ரமேஸ்]
வியாபாரிமூலை, அல்வாய் வடக்கு, அல்வாய்
திதி: 30-08-1993

புலரும் பொழுதுகள் இம் மண்ணில் முகாரி இசைத்திட புதுயுகம் காணத் துடித்திட்ட வேங்கையணி நின்று வித்தாகி வீழ்ந்திட்ட வித்தகனே "பூபாலா" விடிகின்ற தேசத்தில் விருட்சமாய் எழுந்து நிற்பாய் என்பதனால் ஆடைகின்றோம் மன அமைதி வேண்டுகின்றோம் ஆத்ம சாந்தி.

30-08-1993 இன்று திங்கட்கிழமை இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகளிலும் மதியபோசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு வேண்டுகின்றோம்.

கம்பிளிகாப்பான், அல்வாய் வடமத்தி. ((5771))

என்றும் உன்பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, தங்கை தம்பிமார்,

## விறகு தறிப்பதனை ஒழுங்குபடுத்த
# புதிய நடைமுறைகள்

யாழ். குடாநாட்டிலே விறகுக்காகக் கண்டபடி மரங்கள் தறிப்பதனை ஒழுங்குபடுத்துவதோடு மீள் நடுகையினையும் மேற்கொள்ளும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 01-09-93-ம் திகதி முதல் விறகு கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

**நடைமுறைப்படுத்தப்படவுள்ள விதிமுறைகள் வருமாறு:**

01. கூடுதலாக காட்டுமரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை தவிர்த்து ஒருமுகப்படுத்தும் வகையில் தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம்அமைக்கப்பட்டு விறகுகள் கொள்வனவாளர்களுக்கு வழங்கப்படும்.

02. 1) மேற்படி நிலையத்தில் கொள்வனவு செய்து கொண்டு வருவதற்கான அனுமதிப் பத்திரத்தை கொள்வனவாளர்கள் பளை வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

2) உள்ளூரில் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் அனுமதிப்பத்திரம் பெறவேண்டும். இதற்கான அனுமதி கோரும் விண்ணப்பப்படிவத்தை அவ்வப்பகுதி வட்டத் தொடர்பாளரிடம் இருந்து பெற்று பூர்த்தி செய்து கொடுத்தல வேண்டும்.

03. போக்குவரத்து அனுமதிப்பத்திரம் கோரும் விண்ணப்பதாரியிடம் இருந்து விறகின் அளவுக்கு ஏற்ப நிதி அறவிடப்படும். இந்நிதி திட்டமிட்ட வகையில் மரக்கன்றுகள் மீள் நடுகைக்கு பயன்படுத்தப்படும்.

04. வழங்கப்படும் அனுமதிப்பத்திரமானது வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்கு செல்லுபடியாகும். இதனை ஒரேயொரு தடவை மட்டுமே பயன்படுத்தமுடியும். வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது விறகு கொண்டுசெல்லும் முன்னரே காலாவதியாகும்போது அனுமதி வழங்கிய வட்டத்தொடர்பாளரினால் உறுதப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படல்வேண்டும்.

05. அனுமதியின்றி விறகு கொண்டுசெல்வது இனம் காணப்படும் பட்சத்தில் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, கொண்டுசெல்லும் விறகின் 3 மடங்கு பணம் அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

06. ஒவ்வொரு வட்டங்களிலும் நிதித்துறையால் பதிவுசெய்யப்பட்ட விறகு விற்பனை நிலையங்களில் நுகர்வோர் தத்தமது தேவைக்காக கொள்வனவு செய்யும்போது அந் நிலையத்தால் வழங்கப்படும் பற்றுச்சீட்டுடன் கொண்டுசெல்ல அனுமதிக்கப் படுவர். (இதற்கு பிரத்தியேக அனுமதிப்பத்திரம் தேவைப்படாது)

07. தென்னை, பனை மட்டைகள், தேங்காய் மட்டைகள், கதியால்கள், ஊமல் போன்றன கொண்டுசெல்வதற்கு அனுமதிபபத்திரம் பெறப்படத் தேவையில்லை.

08. அனுமதி பெறப்படாது கொண்டு வரப்பட்ட விறகுகள் காவல் துறையினரால் பறமுதல் செய்யப்படுமிடத்து இந்த விறகுகள் அல்லது மரங்கள் பொது ஏலத்தில் விடப்படும்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பானமேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
(சி/7307)

## ஆண்டொன்றின் நீங்காத நினைவலைகள்

அன்னைமடியில்
24-08-1939

ஆண்டவன் அடியில்
10 09-1992

திதி: 30-08-1993



## இராசையா நவரத்தினம்
(ஆசிரியர், யா/மெமோறியல் ஆங்கில கல்லூரி, மானிப்பாய்)

ஆண்டொன்றில் எம்மை
ஆறாத்துயரிலாழ்த்தி
மீளாத்துயில் கொண்டிருக்கும்
எம் இனிய தந்தையே!
நவாலியூரின் புகழுரைக்கும்
ஒப்பில்லா மாணிக்கமே
நாட்டு வைத்தியராம் இராசையாவின்
மைந்தர் நீங்கள் நவமே! என்று
ஊரவர்கள் உரைக்கும் பொழுதினில்!
ஆசான் வேலைதனை சிரமேற்கொண்ட
தங்கள் பெருமைதனை எபபடி உரைப்போம்
ஆண்டொன்று மறைந்தாலும்
தங்கள் நினைவலைகள் மாறாத

நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(சி/7309)

மனைவி: இந்திராணி,
மக்கள்: நரேந்திரன். இந்துசா,
மைத்துனர், மைத்துனிமார்கள்.

## நினைவு கூருகின்றோம்...
## 1993-08-30

1989ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை- கல்முனைப் பகுதியில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**2-ம் லெப் ஜெயம்** (கிருஷ்ணபிள்ளை ஜீவரத்தினம்- வீரமுனை, கல்முனை - அம்பாறை)

யாழ்- கோண்டாவிலில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நீக்ரோ** (— சபாரத்தினம் - செட்டிக்குளம் - வவுனியா)

யாழ் - மாவிட்டபுரத்தில் இந்தியப் பரா அதிரடிப் படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நெடுமாறன்** (வைத்திலிங்கம் கணேசநாதன் - வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டி - யாழ்)

1990ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட சித்தாண்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். வந்தாறுமூலை பல்கலைக்கழக இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக்கொல்லப் பட்ட தமிழ்ப்பெண். ஐயங்கேணிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த்தம்பதியர்.

1992ஆம் ஆண்டு திருமலை - கும்புறுப்பிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அறிவுமணி/பிரசன்னா** (நமசிவாயம் காளிராசா - 13-ம் கட்டை, தம்பலகமம் - திருமலை)

மட்டு - பெருமாவெளிக்காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**சத்தியராஜ்/ஜெயம்** (கதிர்காமத்தம்பி மனோகர் - தம்பிலுவில் - அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**
(சி-7304)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உண்மை வீரத்திற்கு மரணத்தால் ஏற்படுவதை விடவும், கோழைத்தனத்திற்கு அச்சத்தால் ஏற்படும் வேதனை மிகவும் அதிகமாகும்.

-- ஸர் ஃபிலிப் ஸிட்னி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 30-08-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## காலம் கடந்துவிட்டது

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம் தனது தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டும் எனக் கொழும்பிலிருந்து வரும் பேரினவாதப் பத்திரிகைகள் அண்மைக் காலத்தில் எழுதத் தொடங்கியுள்ளன. இதுவரை அரசாங்கத்தின் போர் அறைகூவலுக்கும், தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, ஆதரித்து எழுதி வந்த இப்பத்திரிகைகள் தற்பொழுது இனப்பிரச்சினை குறித்து அரசாங்கம் தனது திட்டத்தை வெளியிட வேண்டும் எனக் கோரத் தொடங்கியுள்ளமை இனப்பிரச்சினை குறித்து பேரினவாதம் எதிர்நோக்கும் நெருக்கடியின் விளைவே ஆகும்.

சிங்கள பேரினவாதப் பத்திரிகைக்கு இத்தகைய அச்சம் ஏற்படக் காரணம் அண்மைக் காலத்தில் இனப்பிரச்சினை விவகாரம் சர்வதேச ரீதியாகப் பெற்ற முக்கியத்துவமும், இனப்பிரச்சினை விவகாரத்தில் ஐ. நா. தலையீடு பற்றிப் பேசப்பட்டு வருகின்றமையுமே ஆகும். அதாவது, இனப்பிரச்சினை தீர்க்கப்படாததைக் காட்டி இலங்கைக்கு ஐ. நா. துருப்புக்களை அனுப்பி விடுமோ என்ற அச்சமே ஆகும்.

அண்மைக் காலம் வரையும் பேரினவாத பத்திரிகைகள் யாவும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஒரே வழி என்ற நிலைப்பாட்டையே கொண்டிருந்தன. இவர்களின் இந்நிலைப்பாட்டால் உருவாகி வந்த சமாதானச் சூழ்நிலைகள் பல குழப்பத்தில் முடிவடைந்தன. தொண்டமானின் சமாதானத் திட்டத்தைக் குழப்பியதில் பெரும்பங்கும், போர்க்கைதிகளின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து உருவாகி வந்த சமாதானச் சூழலை கெடுத்ததில் கணிசமான பங்கும் இப்பத்திரிகைகளுக்கு இருந்தன.

ஆனால், அண்மைக் காலப் போரின் போக்கானது இராணுவ வெற்றி என்பது சாத்தியப்பாடற்றதொன்று என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவலத்தை உருவாக்கியிருந்தது. இந்நிலையில் இராணுவம் வெற்றி பெறாமைக்கு அரசியற் தலைமையே காரணம் எனக் குற்றம் சாட்ட முற்படும் பத்திரிகைகள் அரசியற் தீர்வுதிட்டம் ஒன்றை முன்வைக்குமாறு கோரத் தொடங்கியுள்ளன.

# அம்பாறையில் அதிரடிப்படை அட்டகாசம் அதிகரிப்பு

(அம்பாறை)

கடந்த சில வாரங்களாக அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரின் பொதுமக்களை கைது செய்யும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. பல அப்பாவி பொதுமக்கள் குடும்பங்களாகவும் தனியாகவும் இப்படையினரால் கடத்தப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

கடந்த மாதம் 24ஆம் திகதி அம்பாறை தம்பிலுவில் கிராமத்தினுள் இரவு நேரத்தில் நுழைந்த விசேட அதிரடிப் படையினர் ஒரே குடும்பத்தை சேர்ந்த நாலவரை கடத்திச் சென்றனர். ஏரம்பு வரதராசா, ஞானமுத்து போசலை, வ. திருஞானவதனி (17), வ. லோகிதவதனி (15) ஆகியோரே கடத்திச் செல்லப்பட்டவர்களாவர். மறு நாளும் அதே கிராமத்தினுள் நுழைந்த அதிரடிப் படையினர் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களான வே தங்கராஜா, அவரது மனைவி பூரணம், த. புஷ்பராணி (20), புஷ்பமலர் (12), ஆகியோரையும் வன்னியசிங்கம், கெஞ்சலட்சுமி (24) ஆகிய இருவரையும் கடத்திச் சென்றனர்.

இம் மாதம் ஆறாம் திகதி இரவு தாண்டியடி உமிறி என்ற கிராமத்தில் திருமதி லலிதா ஜெயசிங்கம் நடராஜா சிவராஜன் ஆகியோரும் முருகேஸ் என்பவரும் இதே கிராமத்தில் இதற்கு முதல் தினமும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை கடந்த மே மாதத்தில் தம்பிலுவில் விநாயகபுரத்தில் வைத்து கைதான திருமதி இராசலட்சுமி சண்முகநாதன் என்பவரை படையினர் திருக்கோவில் முகாமில் தடுத்து வைத்துள்ளனர். கடந்த மாதம் இதே பகுதியில் கைதான திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் என்பவரை படையினர் காஞ்சிரன்குடா முகாமில் தடுத்து வைத்துள்ளனர்.

## அம்பாறை விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்க ஏற்பாடு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு அடுத்த பருவ காலத்தில் நெல்வயல்களையும் மேட்டு நிலப்பயிர்களையும் பாதுகாத்துக் கொள்ள துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. அவசர கால சட்ட விதிகளுக்கு அமைவாக தற்காலிகமாக ஒரு பரீட்சார்த்த நடவடிக்கையாகவே துப்பாக்கி உபயோகிப்பிற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவிருக்கின்றது. மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு இதற்கான அனுமதி வழங்குவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகு பயிர்களை பாதுகாப்பதற்கு அத்தியாவசியமாக துப்பாக்கி தேவை என்பதையும் அவர் பயிர் செய்யும் பிரதேசம் காட்டுப் பிரதேசத்தை அண்டியதாகவே இருக்கிறது என்பதையும் பொலிஸ் பொறுப்பதிகாரி உறுதிப்படுத்துவார். முதற்கட்டமாக மாவட்டத்தின் எல்லைப் பிரதேச விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆசிரிய இடமாற்ற விண்ணப்பம் பணிப். ஊடாகவே அனுப்பவேண்டும்

## -கல்வி அமைச்சு செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இடமாற்றம் பெறவிரும்புவதானால் கல்விப் பணிப்பாளர்களூடாகவே இனிமேல் விண்ணபபிக்க வேண்டும்

இது தொடர்பான சுற்று நிருபமொன்றை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. சி. முகைதீன் அந்த மாகாணத்திலுள்ள சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்.

அச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கு இடமாற்றம் கோரி வருகை தரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது இதனால் இவ் அமைச்சின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதோடு நேரமும் வீண் விரயங்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து உங்கள் துசிபார்சுடன் மாகாண கல்விப்பணிப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தங்களால் பாரமெடுக்கப்படும் விண்ணப்பங்கள் யாவற்றையும் ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியவகையில் மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவும்.

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஆசிரியர்கள் எனது அழைப்புக் கிடைத்தால் மாத்திரமே இவ் அமைச்சுக்கு வருகை தரல்வேண்டும். அவசர காரணங்களுக்காக அவர்கள் இவ்வமைச்சுக்கு வருகை தரவேண்டுமாயின் உங்கள் மூலமாகவிண்ணப்பித்து எனது முன் அனுமதியையும் அதற்கான திகதியையும் பெற்றுக் கொண்ட பின்னரே வருகை தரவேண்டும்.

## வெடிமருந்துடன் சென்ற சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)

இலங்கையில் தமது விடுமுறையைகழித்துவிட்டு பாரிஸ் புறப்படுவதற்கிருந்த விமானத்தில் ஏறுவதற்கு கட்டுநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் காத்திருந்த இலங்கையைச் சேர்ந்த 16வயது சிங்கள இளைஞர் ஒருவர் வெடிமருந்துகளை வைத்திருந்தாரென விமான ... ளார்.

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தாத இந்தவெடிமருந்துகளை தாம் எடுத்துக்கொண்டிருக்கும் வீடியோ படத்தில் போலியான காட்சி ஒன்றில் பயன் படுத்துவதற்கும் நண்பர்களிடம் காட்டுவதற்குமே தாம் இதனை எடுத்துச் செல்வதாக இந்த இளைஞர் விசா

## அதிரடிப்படையின் கட்டுப்பாடு ஆரையம்பதி வரை விஸ்தரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பதினாறு மைல் தூரம் வரையிலான பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விசேட அதிரடிப்படையின்பாதுகாப்பின்கீழ்கொண்டு வரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட எல்லையான பெரிய நீலாவணையிலிருந்து பதினாறு மைல் தூரம்வரை அதாவது ஆரையம்பதி வரை விஸ்தரிக்கப்பட்ட பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் இப்போது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிரடிப்படையின்பொறுப்பில் உள்ள பிரதேசங்களுக்குப் பொறுப்பாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போரதீவு, செட்டிபாளையம், தேற்றாத்தீவு, தாழங்குடா, மண்முனை, ஆரையம்பதி, அம்பிலாந்துறை, மகிழடித்தீவு, கிரான்குளம் ஆகிய ஒன்பது இடங்களில் அதிரடிப் படை தற்போது முகாமிட்டுள்ளது.

## தெரிவுக்குழு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்விற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு கடந்த வியாழனன்று கூடிய போது கோரம் இல்லாமையால் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. கூட்டத்திற்கான கோரம் 14 உறுப்பினர்களாக இருக்கும் போது 9 பேர் மட்டுமே அன்றைய கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

ஐ. தே. க சார்பில் அமைச்சர்கள் தயாரட்ன மன்சூர், போல் பெரேரா ஆகியோரும் சுதந்திரக் கட்சியின் சார்பில் மூவரும், ஐக்கிய சோசலிச முன்னணியின் சார்பில் இருவரும் மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் தினேஷ் குணவர்த்தனாவும் அன்று சமுகமளித்திருந்தனர்

## பதவி உயர்வில் அரசியல் தலையீடு வங்கி ஊழியர்கள் புகார்

(கொழும்பு)

ஆளும் கட்சி அரசியல் வாதிகளின் தலையீட்டின் பேரில் ஒழுங்கற்ற முறையில் மக்கள் வங்கியில் பதவி உயர்வுகள் வழங்குவது குறித்து வங்கி ஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிக்கிளை ஆட்சேபம் தெரிவித்துள்ளது. அரசியல் வாதிகள் மக்கள் வங்கியில் பதவி உயர்வுகளில் தலையிடுவதை நிறுத்துமாறு மக்கள் வங்கி ஊழியர் கிளை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவைக் கேட்டுள்ளது.

பதவி உயர்வுகளில் அரசியல் வாதிகள் அத்துமீறித் தலையிடுவதால் மக்கள் வங்கியின் வழமையான பதவி உயர்வுத் திட்டம் குழம்பியுள்ளதாகச் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

வங்கி ஊழியர் சங்கங்களும் வங்கி அதிகாரிகள் சங்கமும் வங்கி நிர்வாகமும் சேர்ந்து பதவி உயர்வுகள் தொடர்பாகத் திட்டம் ஒன்றை வகுத்தது. சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவது என்பது இத் திட்டத்தில் பிரதானமான அம்சங்களில் ஒன்று அரசியல் வாதிகளின் தலையீட்டால் இத் திட்டம் குழம்பியிருப்பதாகவும் ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற முறையில் தலையிட்டு ஆளும் கட்சி அரசியல் வாதிகளின் தலையீட்டை நிறுத்துமாறும் வங்கி ஊழியர் சங்க மக்கள் வங்கிக் கிளை ஜனாதிபதியைக் கேட்டுள்ளது

## பிரேமா காலத்திலும் இப்படிக் கேட்டீர்களா?

### ஜனாதிபதி விஜேதுங்கா கேள்வி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான காமினி திசாநாயக்காவையும், மற்றும் சிலரையும் ஐக்கிய தேசியக் கட்சியினுள் சேர்க்க ஜனாதிபதியும், ஐ. தே. க. தலைவருமான டி. பி விஜெதுங்கா எடுக்க முயற்சிகளுக்கு ... றுக் கொண்ட ஜனாதிபதி விஜேதுங்கா, பிரேமதாசா இருந்த காலத்திலும் நீங்கள் இவ்வாறு கேட்டிருக்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பியதாகவும் கூறப்படுகின்றது

இதேவேளை, காமினியின் வருகைக்கு எதிர்ப்புக் காட்டுவோர் விஜேதுங்காவின் பயமுறுத்தலால் மட்டுமன்றி ஐ.

அண்மைக் காலம் வரையும் பேரினவாத பத்திரிகைகள் யாவும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே ஓரே வழி என்ற நிலைப்பாட்டையே கொண்டிருந்தன. இவர்களின் இந்நிலைப்பாட்டால் உருவாகி வந்த சமாதானச் சூழ்நிலைகள் பல குழப்பத்தில் முடிவடைந்தன தொண்டமானின் சமாதானத் திட்டத்தைக் குழப்பியதில் பெரும்பங்கும், போர்க்கைதிகளின் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து உருவாகி வந்த சமாதானச் சூழலை கெடுத்ததில் கணிசமான பங்கும் இப்பத்திரிகைகளுக்கு இருந்தன.

ஆனால், அண்மைக் காலப் போரின் போக்கானது இராணுவ வெற்றி என்பது சாத்தியப்பாடற்ற தொன்று என்பதை இவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய அவலத்தை உருவாக்கியிருந்தது. இந்நிலையில் இராணுவம் வெற்றி பெறாமைக்கு அரசியற் தலைமையே காரணம் எனக் குற்றம் சாட்ட முற்படும் பத்திரிகைகள் அரசியற் தீர்வுதிட்டம் ஒன்றை முன்வைக்குமாறு கோரத் தொடங்கியுள்ளன.

ஆனால், முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனா, ஆர். பிரேமதாசா போன்ற பலமான அரசியற் தலைமை இருந்த போதும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்றைக் காண முடியாமல் போய்விட்டது என்பதை இப்பத்திரிகைகள் மறந்து போய்விட்டன போல் தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் சிறிலங்கா தமது இராணுவத் தலைமையையும், அதன் மூலத் தந்திரோபாயத்தையும் இழந்து நிற்பதே இன்றைய இராணுவத் தடுமாற்றத்திற்குக் காரணம் என்பதை இப்பத்திரிகைகள் மறந்து விட்டது போல் உள்ளது.

தெரிவுக்குழு அமைக்கப்பட்டபோதே அது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப் போவதில்லை என்பது தமிழ் மக்கள் மத்தியில் தெளிவாக உணரப்பட்டிருந்தது. அத்தோடு, தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு இரண்டுவருடங்கள் ஆகியும் அரசாங்கம் அக்குழுவின் முன் முற்போக்கான கொள்கை எதையும் முன்வைக்கவில்லை. மாறாக, ஒரு பார்வையாளராக மட்டுமே இருந்து கொண்டது. ஆனால், அதனை அப்பொழுது எந்தப்பத்திரிகையும் கண்டு கொள்ளவில்லை பிரச்சினைத் தீர்விற்கு தெரிவுக்குழுவை ஓரேவழி எனவும் எழுதின. ஆனால், இன்றோ தெரிவுக்குழு கூடுவதற்குக் கூட கோரமில்லாத நிலை ஒன்று உருவாகியுள்ளது.

அதாவது, இனப்பிரச்சினையை சிங்கள அரசாங்கத்தால் இராணுவ ரீதியாவும், அரசியல் ரீதியாகவும் நகர்த்த முடியாத ஒரு நெருக்கடி நிலை உருவாகியுள்ளன. இந்நிலையில்தான் இராணுவ ரீதியான தீர்வு பற்றிய கனவு பேரினவாதப் பத்திரிகைகளுக்கு கலையத் தொடங்கியுள்ளன.

இதன் பிற்பாடே பிரச்சினையை உள்நாட்டிலேயே தீர்த்து வைக்கவேண்டும் எனப் பேரினவாதப் பத்திரிகைகள் கோரத் தொடங்கியுள்ளன. இப்பத்திரிகைகளின் கோரிக்கையானது பிரச்சினை தீர்விலுள்ள அக்கறையால் எழுந்தவையல்ல பிரச்சினையில் வெளியார் தலையிட்டு விடுவார்கள் என்ற அச்சத்தினால் எழுந்ததேயாகும். அதாவது பிரச்சினை தமது கை மீறாது பார்த்துக் கொள்ளும் நோக்கிலானதாகும்.

ஆனால் இனப்பிரச்சினை எப்பவோ சிறிலங்காவின் கையைக் கடந்து விட்டது என்பதே யதார்த்த நிலை ஆகும்.

---

பெறவிரும்புவதானால் கல்விப் பணிப்பாளர்களூடாகவே இனிமேல் விண்ணப்பிக்க வேண்டும்

இது தொடர்பான சுற்று நிருபமொன்றை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம். ஏ. சி. முகைதீன் அந்த மாகாணத்திலுள்ள சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்.

அச் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கு இடமாற்றம் கோரி வருகை தரும் ஆசிரியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது இதனால் இவ் அமைச்சின் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதோடு நேரமும் வீண் விரயமாகின்றது. இனிமேல் எவரேனும் ஓர் ஆசிரியர் இடமாற்றம் கோரி விண்ணப்பம் அனுப்புவதாயின் அவ் விண்ணப்பம் தங்களால் பாரமெடுக்கப்படும் விண்ணப்பங்கள் யாவற்றையும் ஒக்டோபர் 31ஆம் திகதிக்குள் கிடைக்கக் கூடியவகையில் மாகாணக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கவும்,

ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகவோ அல்லது வேறு டும். அவசர காரணங்களுக்காக அவர்கள் இவ் அமைச்சுக்கு வருகை தரவேண்டுமாயின் உங்கள் மூலமாக விண்ணப்பித்து எனது முன் அனுமதியையும் அதற்கான திகதியையும் பெற்றுக் கொண்ட பின்னரே வருகை தரவேண்டும்.

---

பதவி உயர்வுகளில் அரசியல்வாதிகள் அத்துமீறித் தலையிடுவதால் மக்கள் வங்கியின் வழமையான பதவி உயர்வுத் திட்டம் குழம்பியுள்ளதாகச் சங்கம் ஜனாதிபதிக்கு எழுதி ஜனாதிபதி நிதி அமைச்சர் என்ற முறையில் தலையிட்டு ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் தலையீட்டை நிறுத்துமாறும் வங்கி ஊழியர் சங்க மக்கள் வங்கிக் கிளை ஜனாதிபதியைக் கேட்டுள்ளது

---

# வெடிமருந்துடன் சென்ற சிங்கள இளைஞர் கைது

(கொழும்பு)

இலங்கையில் தமது விடுமுறையைகழித்துவிட்டு பாரிஸ் புறப்படுவதற்கிருந்த விமானத்தில் ஏறுவதற்கு கட்டுநாயக்க சர்வதேசவிமான நிலையத்தில் காத்திருந்த இலங்கையைச் சேர்ந்த 16வயது சிங்கள இளைஞர் ஒருவர் வெடிமருந்துகளை வைத்திருந்தாரென விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தரால் சந்தேகிக்கப்பட்டு விசாரணையின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தாத இந்தவெடிமருந்துகளை தாம் எடுத்துக்கொண்டிருக்கும் வீடியோ படத்தில் போலியான காட்சி ஒன்றில் பயன் படுத்துவதற்கும் நண்பர்களிடம் காட்டுவதற்குமே தாம் இதனை எடுத்துச் செல்வதாக இந்த இளைஞர் விசாரணையின்போது தெரிவித்தாரென்று விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

1986 ஆம் ஆண்டில் வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக நாட்டைவிட்டு வெளியேறிய இந்த வாலியர் கொழும்பில் வைத்திய சேவையில் ஈடுபட்டிருக்கும் மருத்துவ நிபுணரொருவரின் மகனாவாரென்றும் விசாரணையின் போது வெளியாகியுள்ளது.

# ஐ. நா. சபையின் செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை

- டிரோன் பெர்னாண்டோ

[கொழும்பு]

சர்வதேச பிரச்சினைகளை மன்றில் தலையிட்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் திருப்திகரமானவையாக இல்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

அவசர கால சட்டநீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பெர்னாண்டோ மேலும் கூறுகையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு சர்வதேச மத்தியஸ்தத்தை விரும்பவில்லை எனவும், உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான வல்லமை அரசுக்கு உண்டு எனவும் தெரிவித்தார்

# கைதிகள் விவகாரத்தில் தலையிட மாட்டேன்

ஆயர் கென்னத் பெர்னாண்டோ

(கொழும்பு)

''சிங்கள யுத்தக் கைதிகள் விவகாரத்தில் சிறிலங்கா அரசு கடந்த காலத்தில் நடந்து கொண்ட முறை காரணமாக இவ்விவகாரத்தில் தற்போதைக்கு நான் தலையிடப் போவதில்லை.'' இவ்வாறு அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கைதிகள் விவகாரத்தைச் சிறிலங்கா அரசு கடந்தகாலத்தில் கையாண்டமுறை நம்பிக்கையூட்டக் கூடியதாக இல்லை. அரசு மேற்படி விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய தரப்பினரையும், வெளி உலகையும் கடந்தகாலத்தில் ஏமாற்ற முயற்சி செய்துள்ளது. இதன்மூலம் மேற்படி விவகாரத்தை அரசு சிக்கலாக்கியுள்ளது மேலும், சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்பினருக்குமிடையில் நம்பிக்கையீனங்களை உருவாக்கியுள்ளது இவ்வாறான சூழலில் நான் மேற்படி விவகாரத்தில் தலையீடு செய்யும்போது அரசு கடந்த காலத்தில் நடந்து கொண்டது போன்று மீண்டும் நடந்து கொண்டால் நிலைமை மேலும் மோசமடையும். என் மீதுள்ள மக்களின் நம்பிக்கையும் வீணடிக்கப்படும். அத்துடன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நிலவும் நல்லெண்ணச் சூழ்நிலையை அரசு திட்டமிட்டு குழப்பி விடுவதற்கு முயற்சிக்கலாம் என்றும், இதனால் தற்போதைக்கு மேற்படி விவகாரத்தில் தலையிட மாட்டேன் என்று ஆயர் கென்னத் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார் (க). (பா)

---

## அபிஷேகம்

[கொழும்புத்துறை]

கொழும்புத்துறை மணவியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் ஆலய நடராசர்-சிவகாமசுந்தரி அம்பாளுக்கு இன்று திங்கட்கிழமை நடேசர் அபிஷேகமும் பூசை வழிபாடுகளும் நடைபெறும்

[24]

# ஐ. தே. க. இருப்பதனால்தான் இ. தொ. காவுக்கு கௌரவம்

அட்டன் நகரசபையில் சூடான வாக்குவாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி இருப்பதினாலேயே அமைச்சர் தொண்டமானுக்கு அந்தஸ்தும், கௌரவமும் இன்று கிடைத்திருக்கிறது இன்று அம்பேகமுவபிரதேச சபையை ஆட்சி செய்வதும், சேவல் சின்னத்தில் வெற்றி பெற்றதும் ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே என்பதை இ.தொ.கா. தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அட்டன் - டிக்கோயா நகர சபையில் பேசிய நகர சபையின் உப தலைவர் டாக்டர் ஏ. நந்தகுமார் மேலும் கூறுகையில். ஐக்கிய தேசியக் கட்சி இல்லையேல் அப்பேகமுவ பிரதேச சபையின் ஆட்சியைப் பிடித்திருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய இ. தொ. காவின் நகரக் கமிட்டித் தலைவரும், நகர சபை அங்கத்தவருமான வி. இராமசாமி தமது உரையில், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் தீர்மானத்தின்படியே பிரதேச சபைத் தேர்தலில் சேவல் சின்னத்திலும், நகர சபைத் தேர்தலில் யானைச் சின்னத்திலும் போட்டியிடப்பட்டது அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களும் பெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டனர்.

இந்த நகரசபையில் தலைவர் முதல் உறுப்பினர்கள் வரை அனைவருமே இ.தொ.காவின் பலத்திலேயே வெற்றி பெற்றனர்கள். இ.தொ.காவின் சக்தியால்தான் அட்டன் நகரசபையே இயங்குகின்றது என்பதை மீண்டும் நினைவுபடுத்தி வைக்க விரும்புகிறேன் எனவும் தெரிவித்தார்.

# பிரேமா காலத்திலும் இப்படிக் கேட்டீர்களா?

ஜனாதிபதி விஜேதுங்கா கேள்வி

(கொழும்பு)

முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான காமினி திசாநாயக்காவையும், மற்றும் சிலரையும் ஐக்கிய தேசியக் கட்சியினுள் சேர்க்க ஜனாதிபதியும், ஐ. தே. க. தலைவருமான டி. பி விஜேதுங்கா எடுக்க முயற்சிகளுக்கு பிரதமர் ரணிலும், அவரது குழுவினரும் முட்டுக்கட்டை போட்டு வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

காமினியை ஐ. தே. க வில் இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்துக்கள் பெறப்பட்ட கடிதமொன்று ஜனாதிபதி விஜேதுங்காவிடம் கையளிக்கப்பட்டது எனவும், அதனை பெற்றுக் கொண்ட ஜனாதிபதி விஜேதுங்கா, பிரேமதாசா இருந்த காலத்திலும் நீங்கள் இவ்வாறு கேட்டிருக்கிறீர்களா? எனக் கேள்வி எழுப்பியதாகவும் கூறப்படுகின்றது

இதேவேளை, காமினியின் வருகைக்கு எதிர்ப்புக் காட்டுவோர் விஜேதுங்காவின் பயமுறுத்தலால் மட்டுமன்றி ஐ. தே க. செயலாளர் சிறிசேன குரே, காமினி திசாநாயக்காவின் வருகையை ஆதரிப்பதாலும் கவலை கொண்டிருப்பதாக மேலும் கூறப்படுகின்றது.

---

## கலந்துரையாடல்

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இசைக்கச்சேரி

சங்குவேலி அம்மன்கோவில் அலங்கார உற்சவத்தை முன்னிட்டு இன்று இரவு 8 00 மணியளவில் தெய்வீக இசைக்கச்சேரி நடத்த ஏற்பாடாகியுள்ளது செல்வி சூரியகுமாரிமார்கண்டு வழங்கும் இசை நிகழ்ச்சியில் வயலின் வாத்தியத்தை மோகன் சர்மாவும் மிருதங்கத்தை சுப்பிரமணியக் குருக்களும் வாசிக்கவுள்ளனர்.

# முல்லைத்தீவில் மாவீரர்க்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

கடந்த வியாழன் அதிகாலை இவாலியில் கரும்புலித் தாக்குதல் நடத்தி வீரச்சாவெய்திய இரு கடற்புலிகளின் வித்துடல்கள் முல்லைத்தீவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

கடற்புலி கப்டன் சிவா, கடற்புலி 2ஆம் லெப். சுரேந்தன் ஆகியோரது வித்துடல்கள் ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி, தண்ணீரூற்று போன்ற இடங்களில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு இறுதியில் இராணுவ மரியாதையுடன் முள்ளியவளை மாவீரர் துயிலில்லத்தில் விதைக்கப்பட்டது. இந்த அஞ்சலி நிகழ்வில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்,

---

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான செ. பாலச்சந்திரன் புவியியல் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். 1993ஆம் ஆண்டு ஜனவரி முதல் செல்லுபடியாகுமாறு இப்பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

# கோண்டாவிலில் குண்டுவீச்சு இருவர் பலி, 9 பேர் காயம்

(நமது நிருபர்)

கோண்டாவில் பகுதியில் நேற்று நண்பகல் 1.45 மணியளவில் விமானம் ஒன்று நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் உரும்பராய் பகுதியைச் சேர்ந்த சரோஜாதேவி (38வயது), ஐ. மயில்வாகனம் (51) ஆகியோர் உயிரிழந்தனர்.

மற்றும் ஒன்பது மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இத் தாக்குதலில் காயமடைந்தவர்கள் விபரம்; செல்லையா வசந்தன் (33), கோவிந்தசாமி 65 (வாதரவத்தை புத்தூர்) ஆ. தவமணி (30) செம்மணி றோட், நல்லூர்) ந. ஜெயரட்ணராஜா (32. மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி) குமாரசாமி சிவகுமார் (43 கன்னாதிட்டி லேன், யாழ்ப்பாணம்) சி. மொறிசியஸ் (17, அச்சுவேலி), கே. கிருபா (20 கோண்டாவில் வடக்கு), சுகுமாரன் (45) கோண்டாவில் வடக்கு), கிருஷ்ண பிள்ளை (74 பளை) உதயன் (18). (பா)

## கோண்டாவிலில் தாக்குதல்நடத்திய விமானம் புகைத்தவாறு பலாலியில் இறங்கியது

கோண்டாவில் பகுதியில் நேற்று பிற்பகல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த சிறிலங்கா விமானப் படையின் சியாமாசெற்றி குண்டு வீச்சு விமானம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கலிபர் தாக்குதலில் அவ்விமானம் சேதமடைந்த நிலையில் புகை கக்கியபடி சென்றது.

புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியதும் அவ்விமானம் குண்டு வீச்சை நிறுத்திவிட்டு பலாலி பக்கமாக விரைந்தது. புலிகளின் தாக்குதலினால் புகை கக்கியவாறு விமானம் விரைந்து தப்பியபோது இச்சம்பவத்தை நேரில் பார்த்துக் கொண்டிருந்த அப்பகுதி மக்கள் பெரும் ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இவ் விமானம் கோண்டாவில் பகுதியில் முன்னதாக நடத்திய தாக்குதலில் இருவர் பலியானதும் 09பேர் காயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (24)

## விடுதலைப் புலிகள் வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் இதழின் 42-வது குரல் நாளை வெளிவருகிறது. சிங்கள தேசத்தை உலுக்கிய இராணுவ தோல்விகள் என்ற தலைப்புச் செய்தியுடன் ஏன் இந்த கூச்சல் என்ற ஆசிரிய தலையங்கம், பத்தாண்டுப் போர் - ஒரு நோக்கு, மணலாற்றில் ஒரு போர் பறை'- இதயபூமி-1, சிங்கள அரசு தொடுத்த 2 ஆவது போர், மண்கிண்டிமலையில் மண்கவ்விய இராணுவம் ஒரு தொகுப்புரை ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இதய பூமி வெற்றிக்கு உயிர் தந்த பதின்மர் என்ற நினைவு கட்டுரை, இந்த ஒரு குழிநிலம் எனும் கவியுரையும் இதில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## எறிகணை தாக்குதலில் வடமராட்சியில் சிறுமி பலி

நேற்று நண்பகல் வடமராட்சி கடற்பகுதியிலிருந்து கடற்படையினரும் பலாலி முகாம்படையினரும் விமானப் படை விமானங்களும் வடமராட்சியில் தாக்குதலை நடத்தியதில் சிறுமி ஒருவர் பலியானார். சிலர் காயமடைந்தனர்.

பலாலி முகாமிலிருந்து நேற்று வடமராட்சி மீது ஏவப்பட்ட எறிகணைகளில் சிறுமி ஒருவர் பலியானார் தும்பளை பகுதியில் வீடு ஒன்றின் மீது வீழ்ந்த எறிகணையால் ரவீந்திரன் பிரபா (14) என்ற சிறுமி பலியானார். மேலும் ஒரே குடும்பத்தில் ர. கிருபா (10) ர. வாசுகி (9) ர. சுதன் (5) ஆகியோர் காயமடைந்தனர்.

## இரு முனையில் முன்னேறும் முயற்சி ஆனையிறவில் புலிகளால் முறியடிப்பு

### இராணுவ அதிகாரி பலி!

(ஆனையிறவு)

நேற்று முன்தினம் ஆனையிறவு, முகாமிலிருந்து இரு முனைகளில் முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தி விரட்டியடித்தனர். இதில் இராணுவ அதிகாரி ஒருவர் பலியானார்.

காலை 9.30 மணியளவில் பரந்தன் பக்கமாகவும் சுட்டதீவு பக்கமாகவும் சில மீற்றர் தூரம் படையினர் எறிகணைத் தாக்குதலுடனும் கவசவாகனங்களின் உதவியுடனும் முன்னேறினர். இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர் மோதல் மாலை ஆறு மணி வரை நீடித்தது. தாக்குதலை அடுத்து இரு முனையிலும் படையினர் பின்வாங்கிச் சென்று விட்டனர். இம் மோதலில் படையினர் தரப்பில் இராணுவ அதிகாரி ஒருவர் பலியானதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

## இராணுவ நிதி வெட்டு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் மேலதிக செலவுகளுக்கென ஒதுக்கப்பபட்ட நிதியை குறைப்பதற்கு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க முடிவு செய்துள்ளார். ஒதுக்கப்பட்ட நிதியில் பத்து சதவீதத்தை குறைக்க அவர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அதன் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட அரசின் செலவிலும் பத்து சதவீத குறைப்பை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. எனினும் அரச ஊழியரின் சம்பளமும், ஓய்வூதியமும் இந்த முடிவினால் பாதிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சிறிலங்கா இராணுவ ஆட்சேர்ப்பிற்காக படையினருக்கான மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது தெரிந்ததே.

## கிளாலி விமானத் தாக்குதல் படகு இயந்திரங்கள் நாசம்

(தென்மராட்சி)

விமானப்படையின் இரு புக்காரா விமானங்கள் நேற்று கிளாலி, முகமாலைப் பகுதிகளில் நடத்திய குண்டு வீச்சில் பத்திற்கும் மேற்பட்ட படகு வெளியிணைப்பு இயந்திரங்களும் படகு ஒன்றும் நாசமாகின.

நேற்றுக் காலை 9 மணியளவில் புக்காரா விமானங்கள் முகமாலையில் தென்னந்தோட்டப் பகுதியில் குண்டு வீச்சை நிகழ்த்தின. இதனால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்ததுடன் அப்பகுதியில் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டது. மேற்படி விமானங்கள் பின்னர் கிளாலி கடற்கரையில் உள்ள வாடியில் நடத்திய தாக்குதலில் அங்கிருந்த பத்...


## வீரவணக்க


## கண்ணீர் அஞ்சலி


எமது கல்வி நிறுவன பொருளியல் ஆசிரியர் திரு. வரதராஜன் அவர்களின் தந்தையார் திரு. சின்னத்துரை அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்.

BECON கல்வி நிலையம்

நேற்று பருத்தித்துறை கடலில் கடற்புலிகளால் டோறா படகிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்.



டோறாவின் பின்தளத்தில் 20எம். எம். பீரங்கியுடன் கடற்படையினர் ஒருவர்

## கடற்படை படகு கடலில் புகை மண்டலமாகியது

(வடமராட்சி)

பகல் சமையலுக்கான ஒழுங்குகளைச் செய்ய தயார் படுத்திக் கொண்டிருந்த வேளை முனைக்கடலில் தாக்குதல் சத்தம் ஒன்று பெரிதாகக் கேட்டது.

இவ்வாறு முனையிலிருந்து இடம் பெயர்ந்து மந்திகைப் பகுதியில் தங்கி வந்த அ. திருச்செல்வம் என்பவர் எமது செய்தியாளருக்கு விபரிக்கார்...

### நேரில் கண்டவர் தகவல்

இலக்காகி வெடித்துச் சிதறி எரிந்து சாம்பரானதை நான் அவதானித்தேன்.

அதனையடுத்து அப்பகுதிக்கு குண்டு வீச்சு விமானங்கள் வந்து தேடுதலை நடத்தியதையடுத்து நாங்கள் அனர்த்தங்கள் ஏதும் ஏற்படும் என்ற அச்சத்தினால் இடம்பெயர்ந்தோம் என்றார். (யோ)

## யுத்தத்தை நிறுத்துங்கள் பஞ்ஞாசீக தேரர் கோரிக்கை

தனர். இதில் இராணுவ அதி காரி ஒருவர் பலியானார்.

காலை 9.30 மணியளவில் பாந்தன் பக்கமாகவும் சுட்ட தீவு பக்கமாகவும் சில மீற்றர் தூரம் படையினர் எறிகணைத் தாக்குதலுடனும் கவச வாக னங்களின் உதவியுடனும் முன்

அடுத்து இருமுனையிலும்

செய்திகள் தெரிவித்தன.

## கிளாலி விமானத் தாக்குதல் படகு இயந்திரங்கள் நாசம்

(தென்மராட்சி)

விமானப்படையின் இரு புக்காரா விமானங்கள் நேற்று கிளாலி, முகமாலைப் பகுதிக ளில் நடத்திய குண்டு வீச்சில் பத்திற்கும் மேற்பட்ட படகு வெளியிணைப்பு இயந்திரங்க ளும் படகு ஒன்றும் நாசமாகின.

நேற்றுக் காலை 9 மணிய ளவில் புக்காரா விமானங்கள் முகமாலையில் தென்னந் தோட்டப் பகுதியில் குண்டு வீச்சை நிகழ்த்தின. இதனால் பல மரங்கள் முறிந்து வீழ்ந்த துடன் அப்பகுதியில் பாரிய குழி ஒன்றும் ஏற்பட்டது. மேற்படி விமானங்கள் பின் னர் கிளாலி கடற்கரையில் உள்ள வாடியில் நடத்திய தாக்குதலில் அங்கிருந்த பத் திற்கும் மேற்பட்ட படகு வெளிப்புற இணைப்பு இயந் திரங்கள் எரிந்து நாசமாகின இதில் படகு ஒன்று பலத்த சேதமடைந்தது சில படகு கள் சிறிய சேதத்திற்குள்ளா கின. (86)

பத்து சதவீதத்தை குறைக்க அவர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அகதிகள் பரா மரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட அரசின் செலவிலும் பத்து சத வீத குறைப்பை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. எனினும் அரச ஊழியரின் சம்பளமும், ஓய்வூதியமும் இந்த முடிவினால் பாதிக்கப்பட மாட்டாது என்றும் அறிவிக் கப்பட்டுள்ளது.

அண்மையில் சிறிலங்கா இராணுவ ஆட்சேர்ப்பிற்காக படையினருக்கானமேலதிகநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது தெரிந்ததே.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன பொருளியல் ஆசிரியர் திரு. வரதராஜன் அவர்களின் தந்தையார் திரு. சின்னத்துரை அவர்கள் சிவபதமடைந்துவிட்டார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள்.
**BECON** கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்

(சி7310)

## மரண அறிவித்தல்கள்

### திரு. சி. சின்னத்துரை

195 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திரு. சி. சின்னத்துரை அவர்கள் 29-08-93 ஞாயிற்றுக்கிழமை(நேற்று) சிவபதம் அடைந்துவிட்டார். இவர் திருமதி மகேஸ்வரியின் அன்புக்கணவரும் சி.சிவசுப்பிரமணியம், சி.வரதராஜன், சி விஜயகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சகுந்தலா, திருமதி ஜமுனாவதி, திருமதி பானுகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனார்த்தனி, செந்தூரன், பிரகாஷ், கோகுலன், பார்த்தீபன், இளவேணி, மயூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-08-93] திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில்நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. வரதராஜன்
(மகன்)
(பொருளியல் ஆசிரியர்)

195 B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி/7311)

### சுப்பிரமணியம் நாதகீதன்
### மேஜர் புவீந்திரன்/புகழரசன்

கொழும்புத்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் நாதகீதன் (மேஜர் புவீந்திரன்/புகழரசன்) (29-8-93) நேற்று பருத்தித்துறை கடலில் கரும்புலித் தாக்குதலில் வீரச்சாவு அடைந்து விட்டார். அன்னார் நாதஸ்வர வித்துவான் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மகனும், சுந்தரலிங்கத்தின் பேறாமகனும் பிரமிலா [பத்மா], புஸ்பகீதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தந்தையும்,
சகோதரர்களும்.

இல. 90/7, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை. (5804)

## வாதுவ திரும்பியது

பருத்தித்துறை முனைக்கடற் பரப்பில்நேற்று ஏற்பட்டகடற் படை மீதான தாக்குதலை யடுத்து பருத்தித்துறைஇறங்கு துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த 'வாதுவ' கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு எடுத் துச் செல்லப்பட்டது.

கடற்படையினரின் அவசர பணிப்பையடுத்து இக் கப்பல் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த போதிலும் உடனே அவ்விடத்தை விட்டு அகன்றது. (யோ)

## வீரவணக்க கூட்டம்

தீவக கோட்டத்தில் 7ஆம் 8ஆம் மாதங்களில் வீரச்சாவு எய்திய மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று 30ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் இடம் பெறும். இதில் விடுதலைப்புலி களின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வர். இறுதியில் கலை நிகழ்வும் இடம்பெறும்.

# கடற்படை படகு கடலில் புகை மண்டலமாகியது

## நேரில் கண்டவர் தகவல்

(வடமராட்சி)

பகல் சமையலுக்கான ஒழுங்குகளைச் செய்ய தயார் படுத்திக் கொண்டிருந்த வேளை முனைக்கடலில் தாக்குதல் சத்தம் ஒன்று பெரிதாகக் கேட்டது.

இவ்வாறு முனையிலிருந்து இடம் பெயர்ந்து மந்திகைப் பகுதியில் தங்கி வந்த அ. திருச்செல்வம் என்பவர் எமது செய்தியாளருக்கு விடரித்தார்.

அவர் மேலும் விபரிக்கும் போது நேற்று காலை 9.15 மணிபோல் சமையல் வேலையை ஆரம்பித்துக் கொண்டிருந்த போது கேட்ட வெடியையடுத்து கடலை உற் றுப் பார்த்த போது அங்கே கடற்படையினரின்படகுஒன்று பெரும் புகைமண்டலமாக எரிந்து கொண்டிருந்தது.

அப்படகு கடற்புலிகளின் எதிர்பாராத தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறி எரிந்து சாம்பரானதை நான் அவதானித்தேன்.

அதனையடுத்து அப்பகுதிக்கு குண்டு வீச்சு விமானங் கள் வந்து தேடுதலை நடத்தி யதையடுத்து நாங்கள் அனர்த் தங்கள் ஏதும் ஏற்படும் என்ற அச்சத்தினால் இடம் பெயர்ந் தோம் என்றார். (யோ)

## கடற்புலிகள்

படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதாக வும் இவ்வேளையில், வெடி மருந்து ஏற்றிய கடற் கரும்புலி களின் படகு 'டோறா'வுடன் மோதி அழித்ததாகவும் தக வல்கள் தெரிவிக்கின்றன.

கடற்கரும் புலிகளின் தாக்கு தலுக்குள்ளாகி எரிந்து மூழ் கிக் கொண்டிருந்த 'டோறா' வில் இருந்து விடுதலைப்புலிக ளால் ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன என்றும் பின்னர் 'டோறா' தகர்த்து மூழ்கடிக் கப்பட்டது என்றும் தெரியவ ருகிறது.

## 20மி. மீ.

அஸ்ரா ஓ எலிக்கன் ஏ41 ஏ இலகு கலிபர் பீரங்கி ஒரு பிரித்தானியத் தயாரிப்பாகும். இது பன்முக தேவைகளுக் கான சிறு பீரங்கி. 1939 இலிருந்து பிரித்தானிய கடற்ப டைக்கு இலகு ரகப் பீரங்கிகளை உற்பத்திசெய்யும் பி.எம். ஏ ஆர் சி எனும் நிறுவனத்தின் பெயர் 1989 அஸ்ரா டிஃபென்ஸ் சிஸ்ரம்ஸ் என மாற்றம் செய்யப்பட்டது. ஹிஸ்பானோ சுய்சா 804 எனும் சிறு பீரங்கி ரகத்தை அடிப்படையாக கொண்ட இது வாயுவால் இயங்கும்பின்னுதைப்புள்ள பீரங்கியாகும். பீடத்தில் பொருத்தப்பட்ட ரவைக்கூட்டுக் காவியுடன் 60 குண்டுகள் கொள்ளக்கூடிய ஒரு உருளையைக் கொண்டுள்ளது. இதன் பீடம் 1.7 மீற்றர் உயரமும் 2 மீற்றர் நீளமும் உடையது. ஏ41 ஏ என்ற இப்படைக்கலனின் உற்பத்தி 1970இல் ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் உற்பத்தி செய்யப்படுகிறது. அவுஸ்ரேலியா, பங்களாதேஷ், கனடா, டென்மார்க், மேற்குஜேர்மனி, இஸ்ரேல், இந்தியா, லெபனான், லிபியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, ஸ்பெயின், பிரித்தானியா, யூகோஸ்லாவியா உட்பட 55 நாடுகளின் கடற்படையின் பாவனையில் உள்ளது.

## சுப்பர்

படகில் பொருத்தப்பட்ட ஏனைய சாதனங்கள்:-
- ''டெக்கா'' றேடர் - 01.
- வி. எச். எவ். தொலைத் தொடர்பு சாதனம்- 01
- ஜெனரேட்டர் இரண்டு.
- என்ஜின் -02.
- 8' நீளமான சிறிய படகு -01 (சில வேளைகளில் இராது)
- திசையறி கருவிகள் :- 02.
- ''சி. கியூ ஆர்'' நங்கூரம் :- 01.

## சுப்பர் டோறா

இத் தாக்குதல்பற்றி ஊர்ஜிதம்செய்த கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் பருத் தித்துறைக் கடலில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதலையடுத்து 12 கடற்படையினரைக் காணவில்லை என்றும், இவர்களில் நால்வர் கடற்படை அதிகாரிகள் என்றும் அறிவித்தது.

இவர்கள் அனைவரும் கடற்படைக்கு சொந்தமான படகுஒன்றில் சென்றுகொண்டிருந்த போது வெடிமருந்துகள் நிரம்பிய படகு ஒன்றை தற்கொலை படையைசேர்ந்த ஒருவர் ஓட்டி வந்து கடற்படையினரின் படகுடன் மோதினார் என்றும் தற்பொழுது இப்பகுதியில் விமா ப்படை காணாமற்போன கடற்படையினரை தேடுகின்றனர் எனவும் கூட்டுப்படைத் தலைமை யகம் மேலும் தெரிவித்தது.

## யுத்தத்தை நிறுத்துங்கள் பஞ்ஞாசீக தேரர் கோரிக்கை

[கொழும்பு]

வடக்கு கிழக்கு யுத்தம் தொடங்கி 16 வருடங்களாகின்றன. இந்த சிறிய நாட்டில் இத்தனைகாலம் யுத்தம் நீடிக்கவேண்டுமா? அரசிடம் சக்திவாய்ந்த படைபலம் ஒன்று இருக்கையில் இந்தயுத்தத்தை நெடுங்காலம் நீடிக்க வைப்பதேன்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் அமரபுர சங்க சபையின் தலைவர் மடிகே பஞ்ஞாசீக மஹா நாயக்கதேரோ.

கடந்தவாரம் கிரிபத்கொட சந்தியில், கண்ணிவெடியில் கொல்லப்பட்ட முன்னாள் யாழ்ப்பாண இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணவின் உருவச்சிலையை திறந்து வைத்து மேற்படி தேரோ அங்கு கூடியிருந்தவர்களிடையேபேசினார்:

''இப்போது நடைபெறும் இந்த யுத்தத்தை மேலும் நீடிக்க வைக்காது சிங்கள பௌத்தர்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டும். எமக்கு இருப்பது இந்த சிறிய நாடு மட்டும்தான். ஆனால் தமிழர்கள் வேறு நாட்டிற்கு செல்ல முடியும். எமக்கு இந்த நாட்டை கூறுபோடவேண்டிய அவசியமில்லை''

1984 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் மஹாசங்கத்தினரால் முன் வைக்கப்பட்ட பிரேரணையை தமிழர்களும் ஏற்றனர். ஆனால் அவற்றை நிறைவேற்ற பொறுப்புமிக்க அதிகாரிகள் முயற்சிக்கவில்லை. இவர்களின் இந்த அசமந்த போக்குத்தான் என்ன? தமிழ் சிங்கள மக்களுக்கு யுத்தம் பெரும் வேதனையையும் கவலையையும் அளித்து வருகிறது எனவே இந்த யுத்தத்தை மேலும் நீடிக்கவிடாது முடிவுக்கு கொண்டுவருமாறு அனைத்து பௌத்த குருமார் சார்பாகவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கூட்டத்தில் வித்தியாலங்கார பிரிவேனா அதிபதி வலமிட்டியவாவேகுசல தம்ம தேரர் உட்பட பல பிக்குகளும் உரையாற்றினர்.

## மோட்டார்

சிறிலங்காவினால் வழங்கப்பட்ட மூல ஆவணங்களை உள்ளோரும் மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் தவறாது தத்தமது குடும்ப அட்டைகளையும் தம்முடன் எடுத்துவருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


## கலை விழா

கொடிகாமம்
A.V.M போட்டோ புரொட்சன் வழங்கும்
காசிநாதன் வில்லிசைக் குழுவினரின்
சிறந்த நெறியாள்கையில்

★ சத்தியவான் சாவித்திரி ★

இடம்:- வரணி சிட்டிபுரம் கண்ணகை கலை அரங்கு
காலம்:- (30-8-93) இன்று இரவு 8 மணிக்கு.

ஆர்மோனியம்: P. யோன்கபாஸ்
மிருதங்கம் V. V. வல்லிபுரம்

(5805) கண்ணகை அடியார்கள்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.